# மாணவர்களுக்கு விளையாட்டு போட்டி

**கிணத்துக்கடவு, ஆக. 18–**

கிணத்துக்கடவு, அக்ஷயா பொறியியல் கல்லூரியில், கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில், மாணவர்களுக்கு மண்டல அளவிலான விளையாட்டு போட்டி நடந்தது. இப்போட்டியை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை தேன்மொழி, உடற்கல்வி ஆசிரியர் சரவணன் மற்றும் அக்ஷயா கல்லூரி உடற்கல்வி இயக்குனர் வடிவேல் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



கிணத்துக்கடவு, அக்ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த கபடி போட்டியில், களமிறங்கி கலக்கிய மாணவர்கள்.

போட்டியில், பொள்ளாச்சி வட்ட அளவில், 56 அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில், வாலி பால், டேபிள் டென்னிஸ், கபடி, கோகோ, பால் பேட்மிட்டன் போன்ற போட்டிகள் நடந்தது.

இதில், 14, 17, 19 வயதுக்கு உட்பட்டவர்கள் என, மூன்று பிரிவுகளில் போட்டி நடந்தது. வெற்றி பெறும் மாணவர்கள், மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்பார்கள். இன்று மாணவியருக்கான போட்டிகள் நடக்கிறது.

# 'அறிவு விரிவடைய புத்தகம் வாசியுங்கள்'



■ கிணத்துக்கடவு, அக்சயா கலை அறிவியல் கல்லூரியில், தேசிய நூலகவியலின் தந்தை ரங்கநாதனின் பிறந்தநாள் விழா கொண்டாட்ட நிகழ்ச்சி நடந்தது.

**கோவை, ஆக. 15 –**

கிணத்துக்கடவு, அக்சயா கலை அறிவியல் கல்லூரியில், தேசிய நூலகர் தினத்தை முன்னிட்டு, இந்திய நூலகவியலின் தந்தை பத்மஸ்ரீ ரங்கநாதன், 131வது பிறந்தநாள் விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் கனகரத்தினம் விழாவிற்கு தலைமை வகித்து, நூலகர் ரங்கநாதன் புகைப்படத்தை திறந்து வைத்தார். மாணவர்களுக்கு புத்தக விமர்சனப் போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

எஸ்.என்.எம்.வி., மேலாண்மை இன்ஸ்டிடியூட் நூலகர் உமா மகேஸ்வரி, எஸ்.ஐ.ஐ.எம்.எஸ்., நூலகர் கவிதா ஆகியோர் கலந்துகொண்டனர். கல்லூரியின் நூலகர் சுகன்யா, புத்தகம் வாசிப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். துறை தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.



விழாவில் மாணவர்களிடையே ஆபிசர் டிரைனிங் அகாடமி பயிற்சி கமாண்டர் ஈசன் பேசிய போது எடுத்த படம்.

**அக் ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்**

## முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடக்க விழா

கிணத்துக்கடவு,ஜூலை,10–

கிணத்துக்கடவில் உள்ள அக் ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. இதற்கு கல்லூரி நிர்வாக அறங்காவலர் அ.நாகராஜன் தலைமை தாங்கினார். கல்லூரி தலைவர் தி.சுப்பிரமணியன், செயலாளர் பரங்கராஜ், அறங்காவலர் எஸ். பி.தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் கனகரத்தினம் வரவேற்று பேசினார். இதில் ஆபிசர் டிரைனிங் அகாடமி பயிற்சி கமாண்டர் ஈசன், அமெரிக்க போஸ்டர் மருந்துகள் இணை இயக்குனர் டாக்டர் சகா சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வகுப்புகளை தொடக்கி வைத்து பேசினார்கள். இதில் அக் ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி கபிலன், முனைவர் ராஜசேகர், பொறியியல் கல்லூரி முதல்வர் கி.சிவசங்கரி மற்றும் பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

# 'உங்களது இலக்கில் உறுதியாக இருங்கள்'

**கோவை, ஜூலை 8–**

கிணத்துக்கடவு அக் ஷயா கலை அறிவியல் கல்லூரியில், முதலாமாண்டு மாணவர்களுக்கு இளநிலை வகுப்புகள் துவக்க விழா, கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் நாகராஜன் தலைமை வகித்தார்.

ஆபீசர்ஸ் பிரிப்பேரிங் அகாடமி, டிரெயினிங் கமாண்டர் ஈசன், அமெரிக்கா, பூஸ்டன் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் இணை இயக்குனர் சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

அவர்கள் மாணவர்களிடையே பேசுகையில், 'கல்லூரி துவக்கத்திலேயே இலக்கை தீர்மானியுங்கள். எத்தனை தடைகள் வந்தாலும், இலக்கை அடைவதில் உறுதியாக இருங்கள். விடாமுயற்சி நிச்சயம் வெற்றியை தேடித்தரும்', என்றனர்.

கல்லூரியின் தலைவர் சுப்பிரமணியன், செயலாளர் ரங்கராஜ், அறங்காவலர் தியாகராஜன், தலைமை நிர்வாக அதிகாரி கபிலன், இயக்குனர் ராஜசேகர், முதல்வர் கனகரத்தினம் பங்கேற்றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

# அக்ஷயா கல்லூரியில் முதலாமாண்டு துவக்கம்




பொள்ளாச்சி, ஜூலை 8: கோவை கிணத்துக்கடவில் உள்ள அக்ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு துவங்க விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது.

முதல்வர் கனகரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆபிசர்ஸ் பிரிபேரிங் அகாடமியின் டிரெய்னிங் கமாண்டர் ஈசன், அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் பார்மெட்டிக்கல்ஸ் அசோசியேட் இயக்குனர் மருத்துவர் சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். கல்லூரி இயக்குனர் எஸ். ராஜசேகர் தலைமையுரை வழங்கினார். செயலாளர் ரங்கராஜ் பாராட்டுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் நாகராசன், தலைவர் சுப்பிரமணியன், அறங்காவலர் எஸ்.பி. தியாகராஜன், தலைமை நிர்வாக அதிகாரி கபிலன், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

★ கிணத்துக்கடவு, அக்ஷயா பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் விழிப்புணர்வு பேரணி நடந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் போதை பொருளால் ஏற்படும் தீங்கு குறித்து விளக்கினார். மாணவர்கள், கல்லூரியில் இருந்து பஸ் ஸ்டாண்ட் வரை பேரணியாக சென்றனர்.




■ வால்பாறையில் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு வாசகம் ஏந்தி பேரணியாக சென்றனர். ■ கிணத்துக்கடவு, அக் ஷயா பொறியியல் மற்றும் கலை அறிவிய
கல்லூரியில், விழிப்புணர்வு பேரணி நடந்தது. ■ ரெட்டியாரூர் என்.ஜி.என்.ஜி., மேல்நிலைப்பள்ளி நாட்டுநலப்பணித்திட்டம் சார்பில், விழிப்புணர்வு பேரணி நடந்த